Mr. Kannan filed his petition on 31.12.2012 and his statement of affairs was made of the following particulars.

| | ₹ |
|---|---|
| Creditors – fully secured by lien on stock | 2,000 |
| Creditors – partly secured by lien on shares | 8,00,000 |
| Creditors – unsecured | 15,00,000 |
| Mortgage on buildings | 2,00,000 |
| Creditors payable in full | 60,000 |
| Bills receivable | 28,000 |
| Buildings of the value of | 2,20,000 |
| Machinery (estimated to produce ₹ 2,40,000) | 3,00,000 |
| Furniture and Fittings (estimated to produce ₹ 90,000) | 1,30,000 |
| Debtors (Good – 4,00,000; Doubtful 2,00,000 estimated to produce ₹ 40,000) | 6,00,000 |
| Stock (estimated to produce ₹ 9,00,000) | 13,00,000 |
| Shares (estimated to produce – in full) | 3,20,000 |
| Cash | 2,000 |

Prepare statement of affairs.

---



**Reg. No. : ....................................**

**Code No. : 42316** **Sub. Code : GMCO 31**

B.Com. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2013.

Third Semester

Commerce – Main

ADVANCED FINANCIAL ACCOUNTING – I

(For those who joined in July 2012 onwards)

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 1 = 10 marks)

Answer ALL questions.

Choose the correct answer.

1. கிளை இறுதி கணக்கு முறையின் கீழ், கிளை கணக்கு எந்த வகையைச் சார்ந்தது

(அ) ஆள்சார் கணக்கு

(ஆ) சொத்து கணக்கு

(இ) பெயரளவு கணக்கு

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

Nesamony Memorial Christian College, Marthandam

Under the branch final account system, the branch account is of the nature of a

(a) Personal account

(b) Real account

(c) Nominal account

(d) None of these

2. சார்ந்த கிளை வகையில் கிளை நிலைசொத்து கணக்கு எங்கு பராமரிக்கப்படுகிறது.

(அ) கிளை

(ஆ) துறை

(இ) தலைமை அலுவலகம்

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

In case of a dependent branch Branch fixed asset account are maintained by

(a) Branch

(b) Department

(c) Head office

(d) None of these



3. துறைவாரி கணக்குகள் தயாரிக்கும் போது, விளம்பரச் செலவுகள் பல்வேறு துறைகளுக்கு எந்த அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

(அ) ஒவ்வொரு துறையும் ஆக்கிரமிக்கப்பட்ட இடத்தில்

(ஆ) ஒவ்வொரு துறையும், விற்பனை செய்ததில்

(இ) ஒவ்வொரு துறையின் கையிருப்பு ரொக்கத்தில்

(ஈ) மேல்கூறியவற்றில் எதுவுமில்லை

While preparing the departmental accounts, advertisement expenditure is apportioned between the departments of the basis of the following.

(a) Space occupied by each dept

(b) Sales made by each dept

(c) Cash in hand with each dept

(d) None of the above

4. துறை Aயின் விற்பனை, ₹ 1,00,000, இலாப விகிதம் அடக்கவிலையில் 25% மொத்த இலாபம் என்ன?

(அ) ₹ 25,000 (ஆ) ₹ 20,000

(இ) ₹ 33,333 (ஈ) ₹ 10,000



Nesamony Memorial Christian College, Marthandam

If the rate of Gross profit for Dept. A is 25% on cost and sales of Dept. A is ₹ 1,00,000 then gross profit will be

(a) ₹ 25,000 (b) ₹ 20,000

(c) ₹ 33,333 (d) ₹ 10,000

5. வாடகை கொள்முதல் விலைக்கும் ரொக்க விலைக்கும் உள்ள வித்தியாசம்

(அ) வட்டி

(ஆ) ஒப்பந்த தொகையின் ஒரு பகுதி

(இ) முன் கூட்டி செலுத்தும் தொகை

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

The difference between the hire purchase price and cash price is

(a) Interest

(b) Down payment

(c) Advance payment

(d) None of these



6. தவணைக் கொள்முதல் முறையில், பொருளின் உரிமை வாங்குபவருக்கு எப்பொழுது மாற்றம் செய்யப்படுகிறது

(அ) இறுதி தொகையை செலுத்தும் போது

(ஆ) தொடக்க செலுத்துதலின் போது

(இ) இறுதி மற்றும் ஆரம்ப தொகை செலுத்தும் போது

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

Under instalment system, the ownership of goods passes on to the buyer on the payment of

(a) Final payment

(b) Initial payment

(c) Both down and final payment

(d) None of these

7. குறை உற்பத்தி என்பது

(அ) உரிமைத் தொகையை காட்டிலும் அதிகமான குறைந்தபட்ச வாடகை

(ஆ) குறைந்த பட்ச வாடகையை காட்டிலும் அதிகமான உரிமைத் தொகை

(இ) குறைந்தபட்ச வாடகை

(ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை



Nesamony Memorial Christian College, Marthandam

Shortworkings mean

(a) Excess of minimum rent over royalty

(b) Excess of royalty over minimum rent

(c) Minimum rent

(d) None of the above

8. நிலக்கிழாரின் ஏட்டில் உரிமைத்தொகை கணக்கு ஒரு

(அ) ஆள்சார் கணக்கு

(ஆ) சொத்து கணக்கு

(இ) பெயரளவுக் கணக்கு

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

Royalty account in the books of landlord is a

(a) Personal account

(b) Real account

(c) Nominal account

(d) None of these

9. முன்னுரிமை கடனீந்தோர் இதன் கீழ் தோன்றும்

(அ) பட்டியல் D (ஆ) பட்டியல் E

(இ) பட்டியல் F (ஈ) பட்டியல் H



Preferential creditors are shown under

(a) List D (b) List E

(c) List F (d) List H

10. பட்டியல் H கொடுக்கும் விவரங்கள்

(அ) பற்றாக்குறை கணக்கு

(ஆ) முன்னுரிமை கடனீந்தோர்

(இ) பிணையமற்ற கடனீந்தோர்

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

List H gives details regarding the

(a) Deficiency A/c

(b) Preferential creditors

(c) Unsecured creditors

(d) None of these

PART B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (அ) மொத்த விற்பனை கிளைக்கும் சில்லறை கிளைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

Distinguish between whole sale branch and retail branch.

Or



Nesamony Memorial Christian College, Marthandam

(ஆ) தலைமை அலுவலகத்திலிருந்து புதியதாக தோற்றுவிக்கப்பட்ட கிளைக்கு அடக்க விலையோடு 25% லாபம் சேர்த்து இடாப்பு விலையில் ₹ 19,200 மதிப்பில் சரக்கு அனுப்பப்பட்டது. பின்வரும் விபரங்களைக் கொண்டு கிளைக் கணக்கை தயாரித்து அக்கிளை ஈட்டிய லாபத்தை கணக்கிடுக.

| | ₹ |
|---|---|
| கடன் விற்பனை கிளையில் | 18,460 |
| கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம் | 12,860 |
| தலைமை அலுவலகம் செய்த செலவுகள் | 2,000 |
| கிளையில் ரொக்க விற்பனை | 5,000 |
| இறுதி சரக்கிருப்பு (இடாப்பு விலை) | 4,000 |

Goods are invoiced to a newly opened branch by the H.O. at ₹ 19,200 so as to give 25% profit on cost. From the following particulars, prepare branch A/c and the profit earned by the branch.

| | ₹ |
|---|---|
| Credit sales by branch | 18,460 |
| Cash received from debtors | 12,860 |
| Expenses paid by H.O. | 2,000 |
| Cash sales by the branch | 5,000 |
| Stock at the end (invoice price) | 4,000 |



12. (அ) துறைவாரிக் கணக்குகளின் நன்மைகளை வரிசைப்படுத்துக.

List out the benefits of Departmental accounts.

Or

(ஆ) ராம் நகர், மேத்தா ராம் தன்னுடைய மூன்று துறைகளுக்கு கொள்முதல் செய்த சரக்கின் விபரம் பின்வருமாறு.

துறை X = 200 அலகுகள்
துறை Y = 1400 அலகுகள் } மொத்த செலவு ₹5100
துறை Z = 400 அலகுகள்

மூன்று துறைகளின் விற்பனை பின்வருமாறு

துறை $X = 180$ அலகுகள் @ ₹15 ஒரு அலகிற்கு

துறை $Y = 1500$ அலகுகள் @ ₹18 ஒரு அலகிற்கு

துறை $Z = 450$ அலகுகள் @ ₹6 ஒரு அலகிற்கு

தொடக்க சரக்கிருப்பு

துறை X = 100 அலகுகள்

துறை Y = 400 அலகுகள்

துறை Z = 60 அலகுகள்



Nesamony Memorial Christian College, Marthandam

அனைத்து துறைகளுக்கும் மொத்த லாப விகிதம் சமம் என்று மேத்தாராம் தெரிவிக்கிறார். இவற்றைக் கொண்டு துறைவாரி வியாபாரக் கணக்கை தயார் செய்க.

Mehta Ram of Ram Nagar purchased goods for his three departments as follows.

Dept. X = 200 units
Dept. Y = 1400 units } Total cost ₹5100
Dept. Z = 400 units

Sales of the three department were as follows.

Dept $X$ = 180 units @ ₹15 per unit

Dept $Y$ = 1500 units @ ₹18 per unit

Dept $Z$ = 450 units @ ₹6 per unit

Opening stock:

Dept X = 100 units

Dept Y = 400 units

Dept Z = 60 units

Mehta ram informs you that the rate of Gross profit is the same in all department. You are required to prepare departmental trading account.



13. (அ) வாடகை கொள்முதல் முறைக்கும் தவணைக் கொள்முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளில் ஏதேனும் ஐந்தினை குறிப்பிடுக.

Mention any five differences between hire purchase system and instalment purchase system.

Or

(ஆ) 1.1.2010ல் ராஜன் இரண்டு டிரக் வாடகை கொள்முதல் முறையில் வாங்குகிறார். இதன் ரொக்க விலை ₹ 56,000. ஒப்பந்தம் கையெழுத்தானபோது ₹ 15,000மும் மீதிதொகை வருடத்திற்கு தலா ₹ 15,000 மூன்று வருடத்திற்கு செலுத்த ஒப்புக்கொண்டார். வட்டி விகிதம் 5% குறைந்த இருப்பு முறையில் தேய்மானம் 20% போக்கெழுதுக. டிரக் கணக்கை தயாரிக்கவும்.

Rajan purchased two trucks on 1.1.2010, the cash price being ₹ 56,000. The purchase is on hire purchase basis ₹ 15,000 being paid on signing the contract and ₹ 15,000 being paid annually for 3 years. Interest is at 5% Depreciation is at 20% under reducing balance method. Prepare Trucks a/c.



Nesamony Memorial Christian College, Marthandam

14. (அ) குறைந்தபட்ச வாடகை மற்றும் துணை குத்தகை - சிறுகுறிப்பு தருக.

Write short notes on Dead rent and sub-lease.

Or

(ஆ) ரவி சுரங்கம் ஒன்றை குத்தகைக்கு எடுத்துள்ளார். குறைந்த பட்ச வாடகை வருடத்திற்கு ₹ 750, ஒவ்வொரு டன்னுக்கும் 35 காசுகள் வீதம் உரிமைத் தொகை செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். ஒவ்வொரு ஆண்டிலும் உரிமைத் தொகையை விட கூடுதலாக உள்ள குறைந்தளவு குத்தகை தொகையை அடுத்த இரண்டு ஆண்டுக்குள் மீட்க வேண்டும். உற்பத்தி விபரம் பின்வருமாறு.

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| உற்பத்தி (டன்களில்) | 1000 | 1500 | 2500 | 1500 | 1000 |

குறை உற்பத்தி கணக்கை தயாரிக்கவும்.

Ravi took a colliery on lease. The dead rent was ₹ 750 a year. Merging into a royalty of 35 paise per tonne of coal raised, with the right to recover short workings out of royalties of two subsequent years from the period in which the shortworkings arose. The output raised were:

| Year | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| Output (tonns) | 1000 | 1500 | 2500 | 1500 | 1000 |

Prepare short working account.



15. (அ) பற்றாக்குறை கணக்கில் உள்ளடங்கியவைகள் யாவை?

What are the contents of deficiency account?

Or

(ஆ) பிரசிடென்சி நகரங்கள் நொடிப்பு நிலை சட்டம் மற்றும் மாகான நொடிப்பு நிலைச்சட்டம் இவற்றின் அடிப்படையில் பின்வரும் பொறுப்புகளிலிருந்து முன்னுரிமை கடனீந்தோரை கணக்கிடுக.

| | ₹ |
|---|---|
| 3 மாத சம்பளம் 10 எழுத்தர்களுக்கு | 3,600 |
| ஒரு மாதக் கூலி 12 கூலியாட்களுக்கு | 1,600 |
| விற்பனை வரி | 400 |
| 3 மாத வாடகை நிலக்கிழாருக்கு | 600 |
| வருமான வரி | 1,000 |
| கூலி 4 பணியாளர்களுக்கு | 1,400 |
| சம்பளம் | 1,000 |
| நகராட்சி வரி | 400 |
| கூலி | 6,000 |



*Nesamony Memorial Christian College, Marthandam*

What are the preferential creditors in the following liabilities of an insolvent according to presidency towns insolvency act and provincial insolvency act?

| | ₹ |
|---|---|
| 3 months salary for 10 clerks | 3,600 |
| One month wages of 12 labourers | 1,600 |
| Sales Tax | 400 |
| 3 months rent of land lord | 600 |
| Income tax | 1,000 |
| Wages of 4 servants | 1,400 |
| Salaries | 1,000 |
| Municipal taxes | 400 |
| Wages | 6,000 |

PART C — (5 × 8 = 40 marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

16. (அ) சார்ந்த துறைகளின் குனாதிசயங்களை சுருக்கமாக விளக்குக.

Briefly explain the salient features of dependent branch.

Or



(ஆ) பின்வரும் விவரங்கள் பாம்பே கிளைக்குரியது. 31.12.2012 ஆண்டோடு முடிவடையும் கிளைக் கணக்கை தயாரிக்கவும்.

| | ₹ | ₹ |
|---|---|---|
| தொடக்க இருப்புகள்: | | |
| சரக்கு | | 15,000 |
| கடனாளிகள் | | 30,000 |
| சிறு ரொக்கம் | | 300 |
| 2012ல் கிளைக்கு அனுப்பிய சரக்கு | | 2,52,000 |
| 2012ல் கிளையிலிருந்து பெறப்பட்டவை | | |
| ரொக்க விற்பனை | 60,000 | |
| கடனாளிகளிடமிருந்து பெற்றது | 2,10,000 | 2,70,000 |
| 2012ல் கடன் விற்பனை | | 2,28,000 |
| 2012ல் கிளைக்கு அனுப்பிய காசோலை | | |
| சம்பளம் | 9,000 | |
| வாடகை & வரி | 1,500 | |
| சிறு ரொக்கம் | 1,100 | 11,600 |
| கிளை திருப்பி அனுப்பிய சரக்கு | | 2,000 |
| இறுதி இருப்புகள்: | | |
| சரக்கு | | 25,000 |
| சிறு ரொக்கம் | | 200 |
| கடனாளிகள் | | 48,000 |



Nesamony Memorial Christian College, Marthandam

From the following particulars relating to Bombay Branch for the year ending 31st December 2012. Prepare Branch Account in the head office books.

| | ₹ | ₹ |
|---|---|---|
| Opening Balance: | | |
| Opening Stock | | 15,000 |
| Debtors | | 30,000 |
| Petty cash | | 300 |
| Goods sent to branch during 2012 | | 2,52,000 |
| Remittance from branch during 2012 | | |
| Cash sales | 60,000 | |
| Received from debtors | 2,10,000 | 2,70,000 |
| Credit sales during 2012 | | 2,28,000 |
| Cheques sent to branch during 2012 | | |
| For Salaries | 9,000 | |
| For Rent and Taxes | 1,500 | |
| For Petty Cash | 1,100 | 11,600 |
| Goods returned by Branch | | 2,000 |
| Closing Balance: | | |
| Stock | | 25,000 |
| Petty Cash | | 200 |
| Debtors | | 48,000 |



17. (அ) துறைவாரி கணக்குகளுக்கு பின்பற்றப்படும் முறைகளை விவரி. மேலும் இதனுடைய நோக்கங்களை விளக்குக.

Enumerate the method followed for departmental accounting and explain its objectives.

Or

(ஆ) பின்வரும் தகவல்களைக் கொண்டு துறைவாரியான வியாபார மற்றும் இலாப நட்டக்கணக்கு 31.12.2012 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கவும்.

| | துறை. A | துறை. B |
|---|---|---|
| | ₹ | ₹ |
| சரக்கு (ஜனவரி 1) | 40,000 | – |
| வெளியில் கொள்முதல் செய்தது | 2,00,000 | 20,000 |
| கூலி | 10,000 | 1,000 |
| துறை Aயிலிருந்து சரக்கு மாற்றம் | – | 50,000 |
| இறுதி சரக்கு (டிசம்பர் 31) அடக்கவிலை | 30,000 | 10,000 |
| வெளிநபர்களுக்கு விற்றது | 2,00,000 | 71,000 |

துறை B யின் சரக்கு முழுவதும் துறை A யிலிருந்து அடக்க விலையோடு 25% கூடுதலாக மாற்றம் செய்யப்பட்டது. நிர்வாக மற்றும் விற்பனை செலவுகள் தொகை ₹ 15,000 துறை A மற்றும் துறை Bக்கு 4:1 என்ற விகிதப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது.



Nesamony Memorial Christian College, Marthandam

From the following data, prepare Departmental Trading and Profit and loss account for the year ended 31.12.12.

| | Dept. A | Dept. B |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Stock (January 1) | 40,000 | – |
| Purchases from outside | 2,00,000 | 20,000 |
| Wages | 10,000 | 1,000 |
| Transfer of goods from Dept. A | – | 50,000 |
| Stock (Dec. 31) at cost of the Dept. | 30,000 | 10,000 |
| Sales to outsiders | 2,00,000 | 71,000 |

B's entire stock represents goods from Dept. A which transfers them at 25% above its costs. Administrative and selling expenses amounted to ₹ 15,000 which are to be allocated between departments A and B in the ratio of 4:1 respectively.

18. (அ) தவணைக் கொள்முதல் முறை என்றால் என்ன? இதனுடைய பயன்களை விளக்குக.

What is installment purchase system? Explain its usefulness to a buyer.

Or



(ஆ) A என்பவர் வாடகை கொள்முதல் முறையில் ஒரு டிரக் ₹ 74,500 ரொக்க விலையில், ரூபாய் 20 ஆயிரம் ஒப்பந்தம் செய்து கொண்ட நாளில் செலுத்த ஒப்புக்கொள்கிறார். மீதித் தொகையை வருடத்திற்கு தலா 20,000 வீதம் மூன்று ஆண்டு தவணைகளாக செலுத்துகிறார். ஒவ்வொரு வருட வட்டியை கணக்கிடுக. மேலும் வாடகை விற்பனையாளர் கணக்கை மூன்று வருடங்களாக தயார் செய்க.

A purchased a truck on hire purchase system at a cash price of ₹ 74,500. He paid ₹ 20,000 on signing the agreement and the rest in three annual installment of ₹ 20,000 each. Calculate interest for each year and prepare Hire vendor account for three years.

19. (அ) உரிமைத் தொகை பற்றி நீவிர் புரிந்து கொள்வது என்ன? இது எப்பொழுது பெறப்படுகிறது அல்லது செலுத்தப்படுகிறது?

What do you understand by royalty? When is this received or paid?

Or



Nesamony Memorial Christian College, Marthandam

(ஆ) நெய்வேலி நிலக்கரி கம்பெனி லிட் சுரங்கம் ஒன்றை குத்தகைக்கு எடுத்துள்ளது. எடுக்கப் பெற்ற ஒவ்வொரு டன் நிலக்கரிக்கு உரிமைத் தொகையாக ₹ 5 வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்ச வாடகை வருடத்திற்கு ₹ 60,000. குறை உற்பத்தியை மீட்கும் உரிமை முதல் ஆறு வருடங்களுக்கு உள்ளன. முதல் ஆறு ஆண்டுகளுக்கான உற்பத்தி பின்வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி (டண்கள்) | 5500 | 10000 | 15000 | 8000 | 12000 | 20000 |

தேவையான குறிப்பேட்டு பதிவுகளை தருக.

Neyveli coal company Ltd. are the lessee of a mine on a royalty of ₹ 5 per ton of coal raised with a dead rent of ₹ 60,000 per annum and power to recoup shortworkings during the first 6 years of the lease. The output for the first six years were as follows.

| Year | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| Output (tonns) | 5500 | 10000 | 15000 | 8000 | 12000 | 20000 |

Prepare the necessary journal entries in the books of Neyveli Coal Ltd.



20. (அ) நிலை அறிக்கை மாதிரி படிவத்தை தருக.

Give specimen of statement of affairs.

Or

(ஆ) 31.12.2012ல் திரு கண்ணன் அவர்கள் சமர்பித்த மனுவில் அவரது நிலைமை அறிக்கையில் பின்வரும் விபரங்கள் உள்ளன.

| | ₹ |
|---|---|
| கடனீந்தோர் - சரக்கு மீது முழு பிணையம் | 2,000 |
| கடனீந்தோர் - பங்குகள் மீது பாதி பிணையம் | 8,00,000 |
| பிணையமற்ற கடனீந்தோர் | 15,00,000 |
| கட்டிட அடமானம் | 2,00,000 |
| முழுவதும் செலுத்தப்பட்ட கடனீந்தோர் | 60,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 28,000 |
| கட்டிடம் மதிப்பு | 2,20,000 |
| இயந்திரம் (வசூலித்தது 2,40,000) | 3,00,000 |
| அறைகலன் மற்றும் பொருத்துதல்கள் (வசூலித்தது 90,000) | 1,30,000 |
| கடனாளிகள் (நல்லது 4,00,000, ஐயப்பாடு ₹ 2 லட்சம், வசூலித்தது 40,000) | 6,00,000 |
| சரக்கு (வசூலித்தது ₹ 9,00,000) | 13,00,000 |
| பங்குகள் (முழுவதும் வசூலானது) | 3,20,000 |
| ரொக்கம் | 2,000 |

நிலை அறிக்கை தயார் செய்க.



*Nesamony Memorial Christian College, Marthandam*